


‘பிங்கத்தான்’ தொடர் ஓட்ட நிகழ்ச்சி குறித்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது எடுத்த படம். மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை மேலாண்மை இயக்குனர் டாக்டர் பிரத்வி மோகன்தாஸ் மற்றும் பலர் உள்ளனர்.

### மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி:

# பெண்களுக்கான தொடர் ஓட்டம் ஏப்ரல் 13–ந்தேதி சென்னையில் நடைபெறுகிறது

## இணையதளத்தில் பதிவு செய்யலாம்

சென்னை, மார்ச்.2–

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக பெண்களுக்கான தொடர் ஓட்டம் நிகழ்ச்சி ஏப்ரல் 13–ந்தேதி சென்னையில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

### ரூ.20 லட்சம் நன்கொடை

பெண்கள் ஆரோக்கியமான வாழ்வை பெற, மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ‘பிங்கத்தான்’ தொடர் ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தூதுவராக ஓட்டப்பந்தயம் மற்றும் உடற்பயிற்சியில் ஆர்வம் மிக்க திரைப்பட நடிகை குல் பனாக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த தொடர் ஓட்டம் கடந்த 2012–ம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 2013–ம் ஆண்டு இந்தியாவின் 4 நகரங்களில் நடத்தப்பட்டது. இதில் 12 ஆயிரம் பெண்கள் கலந்து கொண்டனர். இதன் மூலம் இதுவரை 20 லட்சம் ரூபாய் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மார்பக புற்றுநோயாளிகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

### 3 பிரிவுகளில் தொடர் ஓட்டம்

இந்த ஆண்டு ‘பிங்கத்தான்’ தொடர் ஓட்டம் இந்தியாவில் 6 நகரங்களில் நடத்தப்பட உள்ளது. சென்னையில் ஏப்ரல் 13–ந்தேதி நடத்தப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மியாட் மருத்துவமனை மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இதில், 10 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் மற்றும் 3 கிலோ மீட்டர் ஆகிய 3 பிரிவுகளில் தொடர் ஓட்டம் நடத்தப்பட உள்ளது. 2 ஆயிரம் பெண்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### இணையதளத்தில் முன்பதிவு

‘பிங்கத்தான்’ தொடர் ஓட்டத்தில் கலந்துகொள்ள விருப்பம் உள்ள பெண்கள் www.pinkathon.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

இதுகுறித்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது, மியாட் மருத்துவமனையின் இணை மேலாண்மை இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் கூறும்போது, "அனைத்து புற்றுநோய்களும் ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் எளிதில் குணப்படுத்த முடியும். அதிக மறதி உடைய இந்திய பெண்கள் தங்கள் உடல் நலத்தில் கவனமாக இருக்க வேண்டும். அதற்கான வழிமுறைகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும். எப்போதும் விழிப்புடன் இருங்கள்! ஆரோக்கியமாக இருங்கள்!" என்று கூறினார்.

அப்போது, மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், ‘பிங்கத்தான்’ நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் மிலிந்த் சோமன், பாடகி பம்பாய் ஜெய்ஸ்ரீ மற்றும் ரீமா சங்கவி, தேவிகா போஜ்வானி ஆகியோர் உடன் இருந்தனர்.